அறிஞர் அண்ணா

63



கலைமாமணி கவி.கா.மு.ஷெரீப்

கலைஞர்

60

அறக்கட்டளை
அ/வக
ஆய்வு மையம்
சென்னை - 8

இயற்றல்

கலைமாமணி
கவி காமு ஷெரீப்

வெளியீடு:
தமிழ் முழக்கம் பதிப்பகம்
21, பச்சையப்பச்செட்டி தெரு,
சென்னை - 600 002.

J. S. RAJU B.A., B.Ed., M.L.A.
"ANNA ILLAM"
VENKADESAPURAM.
PERAMBALUR 621 212
TIRUCHY Dt.

முதற் பதிப்பு ஜூன் 1986
பதிப்புரிமை பெற்றது.

4154
894823.2541109
தெரு-1

விலை ரூ.6

அச்சிட்டோர்:
நீட் பிரிண்டர்ஸ்
2, ஔலியா சாகிப் முதல் தெரு,
எல்லிஸ் சாலை — சென்னை-600 002.

நன்றி

இந்நூலில் உள்ள கவிதைகளை
முரசொலி நாளேட்டில் வெளியிட்ட
ஆசிரியருக்கு!

இந்நூல் சிறுப்புற வெளிவந்திட
உதவிய கூத்தாநல்லூர்
ஆலிஜனாப் AV.M. ஜாபர்தீன் ஹாஜியார்
அவர்கட்கு!

கவிதைகளை அழகுறவெழுதிய
ஓவியர் 'ஸமீராஸ்' அவர்கட்கு!

அச்சிட்டு வழங்கிய
நீட் பிரிண்டர்ஸ்
அச்சகத்தாருக்கு!

கவிதைச்சுவைஞர் கட்கு!

வழங்குதல்-

தமிழினத் தலைவர்

கலைஞர்

அவர்கட்கு!

★

கவி காமு ஷெரீப்

அறுசீர்

அறிவின் குன்றே!
அன்புருவே!
அழியாத் தமிழின்
தலைமகனே!
நிறைந்த மனத்தோய்!
நெடிபுகழோய்!
நிலைத்த தமிழர்
தனித்தலைவா!
முறையாய் ஆட்சி
நடத்துவதில்
முன்னேர் வழியில்
துலங்கியவா!
செறிவார் கருணை
நிதிப்பெயரோய்!
தேயம் உய்ய
வாழியநீ!

தமிழைச் சூழ்ந்த
கேடகலத்
தமிழர் வாழ்வில்
நலம்துலங்க
தமிழ்நாட் டரசு
செம்மையுற
தன்னிக ரில்லா
ஆட்சிவர
கமழ்தேன் கலந்த
சொல்லாலே
கனிவார் கருத்துத்
தருகின்ற
அமிழ்தாம் கருணை
நிதிப்பெயரோய்
அருந்தமிழ் வாழ
வாழியநீ!

வைரநாவல்

உண்மை கான
வழிநடப்போய்!
உரிமை காக்கச்
சிறைபுகுந்தோய்!!
பண்பை எழுது
கோலாக்கிப்
பகைவர் திருந்த
எழுதிடுவோய்!
எண்ணம் தனிலே
தமிழினத்தை
எண்ணி நாளும்
உழைக்கின்ற
அண்ணை போற்றும்
கருணைநிதி
அண்ண லேநீ
வாழியவே!

ஜமீரோவ்

யாரோ உழைத்த
உழைப்பாலே
ஏற்றம் காண்போன்
நீயல்ல!
போராட் டங்கள்
நடக்கையிலே
போயெங் கோநீ
ஒளியவில்லை!
சீரார் கழகம்
தனைவளர்க்கச்
சிறையில் பலநாள்
தவமிருந்த
பேரார் கருணை நிதிச்
செல்வ,
பிணிமூப் பின்றி
வாழியநீ!

ஸ்மிதாஸ்

இந்திப் போரில்
சிறைபுகுந்தாய்!
எழுந்த கல்லக்
குடிப்போரில்
வெந்த மனத்தார்
சிறைப்பிடித்தார்!
வெகுண்டெ ழுந்த
மும்முனைப்போர்
தந்த துனக்குச்
சிறைவாசம்!
சகித்தே அண்ணன்
வழிநடந்த
எந்தம் கருணை
நிதிச்செல்வ,
இருந்தமிழ் வாழ
வாழியநீ!

பெரியார்

நாட்டைத் தட்டி
எழுப்பியவா!
நடந்தே கழகம்
தனைவளர்த்தோய்!
பாட்டை கோட்டைக்
கமைத்தவனே!
பகைகண் டஞ்சா
அறியேறே!
வேட்டைக் காரன்
காடாக
விளங்கு தின்று
தமிழ்நாடு
சூட்சி தன்ன
வெல்லுபவா,
சுடர்த்தமிழ் வாழ
வாழிய நீ!

பைந்நாள்


டில்லி அஞ்ச
ஆண்டவன்நீ!
நீள்தமிழ் சிறக்க
ஆண்டவன்நீ!
நல்ல இளைஞர்
தமைப்படையாய்
நாளும் கொண்டு
வாழ்பவன்நீ!
இல்லை இன்றிங்(கு)
உனதிகர்த்தார்
ஏற்றம் மிகுந்த
ஆட்சிதர
வல்ல கருணை
நிதிப்பெயரோய்,
வாய்மை சிறக்க
வாழியநீ!


ஸமீரான்

பெரியார் பள்ளி
மாணவனே!
பேணி அண்ணல்
வழிநடப்போய்!
வறியோர் வாழத்
திட்டம்பல
வகுத்தே ஆட்சி
நடத்தியவா!
வருமா இந்தி
மொழிப்பேயை
வாரா தோட்ட
வல்லவனே!
திருவார் கருணை
நிதிச்செல்வ
தேசம் வாழ
வாழியநீ!



பிள்ளைப் பருவம்
முதலாகப்
பேச்சுக் கலையில்
வல்லவனே!
தெள்ளத் தெளியக்
குறட்பாவைக்
தேயத் தோருக்
குரைப்பவனே!
எள்ள லின்றிக்
கலையுலகில்
இன்றும் என்றும்
நிற்கின்ற
உள்ளம் உயர்ந்த
கருணைநிதி
உயர்மா மணியே
வாழிய நீ!


உழைப்பால் உயர்ந்த
உத்தமனே!
ஓயா துழைக்கும்
மாமணியே!
பிழைப்பில் லாத
வேளையிலே
பிழைக்க எண்ணி
அரசியலில்
நுழைந்தே தேசம்
தனைக்கெடுக்கும்
நொய்யல் புத்தியில்
லாதவனே!
அழியாத் தமிழ்த்தாய்
நன்மகனே
அணிசேர் கலஞ,
ஓழியநீ!
லெமிநாவ்


எழுசீர்
அமைச்சராய்ப் பலரை
ஆக்கிடும் தகைமை
அணியென என்றும்
உனக்குண்டு!
தமைச்சூழ் வோரை
உயர்த்திடும் அண்ணை
தன்வழி தவருச்
சால்புடையோய்!
சுமைசுமை யாகப்
பகைவரக் கண்டும்
துவண்டிடா உள்ள
உரமுடையோய்!
கமைதருங் கருணை
நிதியெனுங் கோவே
காலமும் வாழிய
வாழியநீ!
ஸ்மிநாஸ்


தொண்டரின் நேசத்
துணைவனே சுகத்தைத்
துறந்து நாட்டிற்
குழைப்பவனே!
வண்டமிழ்த் தாயின்
மைந்தனே, சோழன்
மரபில் தமிழை
வளர்த்திடுவோய்!
கண்டெனும் உனது
வசனவளத்தைக்
கற்றோர் அமைச்சர்
ஆனதுண்டு!
மண்டிடும் புகழ்சேர்
கருணை நிதியெனும்
மறவா வாழிய
வாழியநீ!


ஸமீநாஸ்



பதவியை நாடி
எவரையும் துதிநீ
பண்ணிய தில்லை
உன்வாழ்வில்!
நிதம்ஒரு விதமாய்ப்
பேசியே பதவியில்
நிலைத்திட நீயும்
நினைத்ததில்லை;
மதுவென நடிப்பு
மயக்கம் ஊட்டி
மக்களை ஏய்த்து
வாழ்ந்தறியாய்!
மதிநிறைக் கருணை
நிதியெனும் கேள்வு,
வாழிய வாழிய
வாழியநீ!

சிலப்பதி காரத்
தேனைப் பருகச்
சிறந்த வகையில்
தந்தவனே!
கலப்பில் லாமல்
பேச எழுதக்
கல்வி இளைஞர்க்
களித்தவனே!
உலப்பிலாத் தன்மையில்
தமிழைக் கற்றோர்
உயர்ந்திட வழிவகை
கண்டவனே!
விலைப்படாக் கருணை
நிதியெனும் நல்லோய்,
வென்றே நின்றே
வாழிய நீ!


எழுத்திலும் பேச்சிலும்
தனக்கென் றோர்வழி
எடுப்பாய் அமைத்துக்
கொண்டவனே!
விழுத்திடும் தோதல்
களத்தில் என்றும்
வென்று வாகை
சூடுபவா!
அழுத்திட நினைப்போர்
கொட்ட மடங்கிட
ஆர்த்தெழும் படைபலம்
உள்ளவனே!
செழித்திடும் மதியுள
கருணை நிதியெனும்
சிங்க ஏறே
வாழிய நீ!
ஸமீரா


வளரக் காரண
மாயிருந் தோரை
மறுவா மனமுள
வாழ்வினனே!
வளர்த்த கடாயாய்
மார்பில் நீங்கா
வடுவுண் டாக்கா
மாண்புடையோய்!
உளத்தில் பகையும்
உதட்டில் கனிவும்
உலவிட வாழா
உயர்குணத்தோய்!
களத்தில் புறங்கொண்
டோடாக் கலஞ,
காலமும் வாழிய
வாழியநீ!
ஸமீரான்

தமிழகம் தன்னில்
தோன்றிய தலைவர்
தங்களின் வாரீ(சு)
ஆனவனே!
தமிழின மக்கள்
தனக்(கு) உனையின்றித்
தலைவர் இலையென
வாழ்பவனே!
தமிழர் தன்னுனத்
தன்மா னங்கொளத்
தட்டி எழுப்பிய
தகுசெயலோய்!
அமிழ்தென உரைசெய்
கருணை நிதியெனும்
ஆன்ருேய் சான்ருேய்
வாழியநீ!

பயிரில் களையென
முளைத்த பகைவரைப்
பதமுடன் இனங்கண்(டு)
உரைப்பவனே!
துயருறும் மக்கள்
துன்பம் துடைக்கத்
தோன்றிய துகளறு
படைத்தலைவ!
நயம்பட அண்ணு
பெயரை உரைத்து
நாட்டை ஏய்க்கா
நல்லவனே!
செயம்பெறு திறனுள
கருணை நீதியெனும்
செம்மனச் செம்மலே
வாழிய நீ!

அரிதனை நரியது
வெல்லும் ஆயின்
அதுவே நெறியன்
ருகாதெனத்
தெரிந்துள தென்னக
மக்களின் தலைவ,
சிங்க ஏறென
வாழ்பவனே!
புரிந்துள உனது
தொண்டினைத் தமிழகம்
போற்றும் என்றும்
அறிந்திடுவாய்!
அருந்தமிழ்க் காவல,
அனைத்தும் அறிந்த
அறிவார் கலைஞ,
வாழியநீ!

பொய்யது சிலகால்
வெல்லும்; அதுவே
பூமியில் நிலையாய்
ஆவதில்லை!
செய்ய உதய
சூரியன் தன்னைச்
சிற்றிலை எத்தனை
நாள் மறைக்கும்?
மெய்யினை மக்கள்
இடத்தில் எடுத்து
விளக்கும் துணிவுள
நற்றலைவ,
துய்ய மனத்தோய்
துகளறு குணத்தோய்
சூதிலாக் கலைஞ,
வாழியநீ!

எண்சீர்

செந்தமிழர் குலஞ்செழிக்க
வந்துதித்த செல்வ
சீர்திருத்தப் படையணியின்
தளபதியே வாழ்வில்
சந்ததமும் தமிழ்நாட்டின்
நலத்தினையே எணணும்
தனித்தலைவா, தன்மான
இயக்கத்தின் வித்தே!
நொந்துகெட்ட ஏழையரின்
துயர்தீர்க்க வென்றே
நோதக்க செய்பவரை
எதிர்த்து நிற்தும்பெரியார்
தந்தபெரும் படையேறே,
கருணைநிதி யென்னும்
தலைவணங்கா நற்கலஞ,
வாழியநீ வாழி!

திருக்குவளைச் சிற்றூரில்
அஞ்சுகத்தாய் பெற்ற
செழுந்தமிழே, தமிழுற்றே
சீர்திருத்தக் கருவே!
மருத்துவனுய் மருந்தாகத்
தமிழ்க்குலத்தின் நோயை
மாளவைக்க வந்துதித்த
அறிவார்ந்த அறிவே!
விருந்தாக நாட்டினுள்ளே
நுழைந்தவர்கள் ஆளும்
வேதனையை வேரறுக்க
வேல்துலக்கும் வேந்தே!
அருந்தொண்டர் அணிகொண்ட
கருணாநிதி யென்னும்
ஆற்றல் மிகு நற்கலைஞ,
வாழியநீ வாழி!

முத்துவேலர் மகனுக
வந்துதித்த மதியே!
முத்தமிழைக் காக்கவந்த
வித்தகமா மணியே!
எத்தர்களை இனங்கண்டு
அவர்கள்வினை யறுக்க
இடியெனவே முரசொலிக்கும்
ஏற்றமிகும் தலைவ,
கத்துங்கடல் சூழ உள்ள
தமிழகத்தை இந்தி
கவராமல் கண்விழித்துக்
காவல்செய்யும் களிறே!
சித்தமிக உயர்வான
கருணைநிதி என்னும்
செழுந்தமிழர் குலவிளக்கே
வாழியநீ வாழி!

அயர்வின்றி உழைப்பதிலே
பெரியாரை நிகர்த்தாய்!
அறிவார்ந்த சிந்தனையில்
அண்ணைவின் தம்பி!
கயவர்களைக் கருவறுத்துத்
தாய்நாட்டைக் காக்கும்
கடமையிலே தரிகாலன்
வாரீசாய் நிற்போய்!
அயல்நிலத்தார் தமிழ்நிலத்தை
ஆளலென்னும் அநீதி
அற்றொழிய இளஞர்அணி
அமைத்ததள பதியே!
நயவஞ்சச் செயலறியாக்
கருணைநிதி என்னும்
நற்கலைஞ, கலையூற்றே,
வாழிய நீ வாழி!

தனக்காகக் கட்சிகண்ட
தலைவர்பலர் உண்டு!
தன்னினமின்றி மேதையில்லை
என்பாரும் உண்டு!
முனைப்பாகப் பேசிச்செயல்
ஒன்றேனும் செய்ய
முடியாதார் தலைவர்களாய்
ஆனதுவும் உண்டு!
உனைப்போலே யாரையா
சொற்செயல்இ ரண்டும்
ஒன்றிணைந்து சமமாக
நிற்கும்நிலை கண்டார்?
கனித்தமிழர் உயிரான
கருணைநிதி என்னும்
கலைக்குன்றே,நறுந்தமிழே,
வாழியநீ வாழி!

தான்மட்டும் தலைவரென
வாழ்பவரும் உண்டு!
தன்னலத்தால் கட்சிநலம்
தொலைத்தவரும் உண்டு!
தேன்போன்ற இனிப்புரையும்
புன்சிரிப்பும் தந்து
செயலனைத்தும் தீயனவாய்ச்
செய்பவரும் உண்டு!
ஆன்றோர்கள் போற்றநற்காய்
அருந்தமிழில் பேசி
அன்னியற்குத் தனைஅடகு
வைப்பவரும் உண்டு!
ஈன்றருளும் பழிக்கின்ற
இவர்களிலும் வேருய்
இருப்பவனே, எம்கலஞ,
வாழியநீ வாழி!

உனக்காக உளபாதை
ஈரோட்டுப் பாதை
உன்தலைவர் பெரியாரும்
அண்ணுவு மாகும்!
மனக்குறையால் உனையேசும்
மானிடர்க்குச் சொல்வேன்
மாத்தமிழர் வாழவெனில்
கருணைநிதி வேண்டும்!
நினைவெல்லாம் மக்களின்பால்
செலுத்தாத பேர்கள்
நீள்பதவி வகிப்பதினால்
யாருக்கென்ன லாபம்?
கனிவுடனே மக்களுள்ளத்
தவிசினிலே வாழும்
கருணைநிதி எனுந்தலைவ,
வாழியநீ வாழி!

அண்ணுவின் உடனமர்ந்து
படமெடுத்துக் கொண்டோர்
அநேகரிந்த நாட்டினிலே
உண்டுமையா உண்டு!
கண்ணுலே அண்ணுவைக்
கண்டுள்ளேன் என்று
கதைப்பவரும் பதவிபெற
வாய்ப்புள்ள நாளில்
அண்ணுவின் நினைப்பென்ன
இலட்சியங்கள் என்ன
அவர்கண்ட கனவென்ன
என்பதெலாம் அறிந்து
மண்மீது அவைநடக்கத்
தொண்டாற்றும் மக்கள்
மனத்திலுறை நற்கலைஞ,
வாழியநீ வாழி!

நாடாண்டோர் செய்கொடுமை
அனைத்தையுமே ஏற்று
நலிவுற்றுச் சிறைப்பட்டு
நோய்ப்பட்டு வீடு
காடாகும் படிவிட்டு
மனவிமக்கள் வாடக்
கட்சியிடும் பணியேற்று
ஊர்சுற்றித் தேகம்
ஓடாகும் படி உழைத்துத்
தலைவர்தரும் சொல்லிற்கு
உடன்பட்டுப் பின்பற்றி
அனுபவத்தைப் பெற்று
நாடாளும் பணியினையே
ஏற்றுச்செயல் பட்ட
நன்மணியே, நற்கலைஞ,
வாழிய நீ வாழி!

திட்டமிட்டு நாடாண்ட
செழுந்தலவா வாழ்வில்
திட்டமிட்டு நீபதவி
தனைப்பிடித்த தில்லை!
வுட்டமிட்டுக் குஞ்சுதனைத்
தூக்குகின்ற பருந்தின்
வழியுனது வழியல்ல
தொண்டுனது வழியாம்!
கட்டப்பட வேறெருவன்
பலன்தனக்கென் ருக்தும்
கருங்காலித் தொழிலென்றும்
நீபடித்த தில்லை!
மட்டில்லா உழைப்பாலே
நாட்டின்நலம் பேணும்
மாசற்ற நற்கலைஞ,
வாழிய நீ வாழி!

ஒன்பான் சீர்

காலமெலாம் நாட்டிற்காய் உழைப்பதுன்றன்
கொள்கை;எந்தக்
கருத்தையுமே வெளிப்படையாய்
உரைப்பதுன்றன் பெற்றி!
ஞாலமெலாம் எதிர்த்திடினும் தான் கொண்ட
கொள்கை,தன்ன
நலிவின்றிக் காப்பதுன்றன்
நல்லதொரு பண்பு!
சாலவுயர் பெரியாரை அண்ணலைவப்
போற்றல், பதவி
தனைப்பிடிக்க யெனும் வித்தை
பயிலாத நல்ல
சீலமிகு நற்கலைஞ, கருணநிதி
என்னும்,தமிழர்
சீர் சார்ந்த செல்வமே நீ
வாழியவே வாழி!

இல்லையுனைப் போல்தலைவன் வேறிந்த
நாட்டில், தமிழை
எதிர்ப்பவரை எதிர்க்கின்ற
இனையில்லா வீர,
நல்லதையே எண்ணுவது நல்லதையே
சொல்லல், என்னும்
நல்லமனச் செம்மலேயிந்
நாட்டினரின் வாழ்வே!
எல்லையிலாத் திட்டங்களை வாயாலே
சொல்லிச் செயலில்
தெனையுமே செய்யாதார்
நாடாள்வ துண்டு!
அல்லவே நீ அவரைப்போல்; கருணைநிதி
யென்னும், மக்கள்
அகத்திலுறை நற்கலைஞ,
வாழியநீ வாழி!


இமிழ்கடல் சூழ் வையத்தார் யாவருமே
சொல்வார், இனத்தால்
எவருக்குநீ அடிமையென
ஆகிடாதே" என்று
தமிழினத்தார் தமிழ்நாட்டை ஆளவேண்டும்
என்றே, இந்தத்
தரையறியப் பெரியாரும்
அண்ணாவும் சொன்னார்!
அமிழ்தான அவ்வுரையை அறிந்தவரின்
தலைவா, உன்னை
ஆதரித்தல் தமிழினத்திற்
காக்கமெனக் கண்டோம்!
கமழ்மதுரத் தமிழ்வளர்க்கும் கருணாநிதி
என்னும், மக்கள்
கருத்திலுறை நற்கலைஞ,
வாழியநீ வாழி!

இனநலத்தை விட்டவர்கள் தமிழினத்தார்
ஆகார் ; தமிழன்
இல்லாதான் பின்செல்வோன்
தமிழ்மகனே ஆகான் !
மனச்சாட்சி ஒன்றிருந்தால் பெரியாரின்
தொண்டன், என்றும்
மாற்றுனின் தொண்டனென
ஆகிடவே மாட்டான் !
முனைப்பான தன்மான இயக்கத்தான்
என்போன், பதவி
மோகத்தால் இனத்துரோகம்
என்றைக்கும் செய்யான்!
தனைவிற்கா நற்கலைஞ, கருணைநிதி
யென்னும், தமிழர்
தன்மானக் காவலனே
வாழியநீ வாழி!

நீரில்லா நாட்டிற்கும் மந்திரிமார்
உண்டு; கள்ளர்
நீராக ஓடவிடும்
அரசாங்கம் உண்டு!
ஏர்ப்பூட்டா நிலத்திற்கும் வரிவசூலிப்
புண்டாம்; என்றும்
எரியாத விளக்கிற்கும்
கட்டணங்கள் உண்டு;
தேர்ஏறி பவனிவரும் அமைச்சர்களும்
உண்டு இவற்றைத்
திருத்தும்படி சொல்லும் உனத்
திட்டுவாரும் உண்டு!
நேர்மைக்காய் உயிர்வாழும் கருணாநிதி
யென்னும் - மக்கள்
நெஞ்சிலுறும் நற்கலைஞ,
வாழிய நீ வாழி!

நிலம்பெயர்ந்தே ஓடுகின்ற மக்கள் தனைப்
பார்த்து, "நீங்கள்
நில்லுங்கள் வாழவகை
செய்கின்றேம்"என்று
நலம் உரைத்துத் தேற்றுகின்ற அரசிங்கே
இல்லை ; மக்கள்
நலிவிற்கோர் எல்லையில்லை,
உடனடியாய் இந்த
நிலைமாற வேண்டுமென்று சொல்லுகின்ற
உன்னை ; திட்டும்
நெடுநாக்கர் வளர்ச்சிக்குக்
குறையேதும் இல்லை ;
மலைவில்லா உளமுள்ள கருணாநிதி
யென்னும் ; மக்கள்
மனத்துறையும் நற்கலைஞ,
வாழிய நீ வாழி!

"உலகுகந்து போற்றுகின்ற தலைவர்களை
யீன்று, புகழின்
உச்சியினைத் தொட்டுநின்ற
தமிழகத்தில் இன்று
மலைவில்லா ஆற்றலுள்ள ஓர்தலைவன்
இல்லை; தமிழ்த்தாய்
மலடியென ஆகிவிட்டாள்
எனச்சொல்லி நகைத்த
தொலைநோக்குச் சற்றுமிலா மானுடர்கள்
நாண, அறிவின்
சுடராக அரசியலின்
விடிவெள்ளி யாக
நிலையான தலைவனென ஆகிநிற்கும்
கலைஞ, தமிழர்
நிலையுயர்த்த வந்தவனே
வாழிய நீ வாழி!


வளர்ச்சியிலே இமயம்நீ வன்மையிலும்
அஃதே; உன்னை
வஞ்சிக்க முனைந்தவரில்
வென்றவரே யில்லை!
தளர்ச்சியின்றித் தினம் உழைக்கும்
தன்மானத் தலைவ,பொய்யர்
தரைமட்ட மாகும்படி
மெய்யுரைக்கும் நல்லோய்!
மலர்ச்சியுற்றுத் தமிழர்களின் வாழ்வுதென்ற
லாகத் தனது
வாழ்வெல்லாம் உழைத்துமுன்றேரு
அறுபதினைக் கண்டோய்!
நிலத்தினிடை உனநிகர்த்த ஒருதலைவ
னில்லை; தமிழர்
நெஞ்சிலுறை நற்கலைஞ,
வாழியநீ வாழி!

சரித்திரங்கள் படைப்பவனே! தமிழகத்தார்
நெஞ்சில்; என்றும்
சந்தனமாய் மணப்பவனே!
குறிஞ்சிமலர்ப் போல்வாய்!
தரித்திரர்கள் படுந்தொல்லை அகன்றிடவும்
அவர்கள்; வாழ்வில்
சமதர்மம் பூத்திடவும்
எண்ணிடுதல் அல்லால்
உரித்தான எண்ணம்வே றில்லாத
தலைவ; உன்றன்
உயர்வொன்றே தமிழினத்தார்
உயர்வாகும்; ஆட்டை
இருமுப்ப தும்கடந்தாய் இருமுப்ப
தாண்டு; புவியில்
இன்னும்நீ எழில்கலைஞ,
ஏற்றமுடன் வாழி!

கரைபுரண்டு நீரோட வேண்டியகா
லத்தில், நல்ல
காவேரி நீரற்று
வரண்டிருக்கக்கண்டோம்!
கருமேகம் வெளுத்திருக்க மழையற்றுப்
போக, எங்கும்
கள்ளோடு சாராயம்
பெருக்கெடுக்கப் பார்த்தோம்!
பொறுப்பற்ற அரசாங்கம் நடக்கின்ற
தாலே, எல்லாப்
பொருள்களுமே விலையேறி
விற்கின்றன நாட்டில்!
திருவார்ந்த அண்ணலின்வழிவந்த
கலைஞ, உன்றன்
சீராட்சி ஞரமக்கள்
வாழ்த்துகின்ருர்,வாழி!



பதின்சீர்

அதிகார முற்றுமொரு இடத்தினிலே
குவிதல், மிக்க
ஆபத்தாம் எனச்சொன்னல் முறைத்துப்பார்க்
கின்றீர், நீயார்
இதுபற்றிக் கேட்பதற்கென்(று) உரைக்கின்றீர்
சில்லோர்; மற்றீர்
ஏனிந்த வம்பென்றே ஒதுங்கிக்கொள்
கின்றீர், பெற்ற
சுதந்திரத்தால் தமிழர்பெற்ற நலனென்ன
என்றுல், நாட்டைத்
துண்டாடப்போடுகின்ற வித்திதாமென்
கின்றீர்; பொதுவாய்
எதைநீசொன் னுலுமதை எதிர்ப்போரின்
இடையே நாளும்
ஏற்றம்பெறும் நற்கலைஞ, வருகாண
தன்புநிறை ஆட்சி



சாகின்றான் இலங்கையிலே தமிழனென்று
சொன்னால், அவனைச்
சாகவிடு தடுக்காதே என்பதற்கோர்
அரசா? இங்கே
வேகின்றார் படித்தவர்கள் வேலையின்றி
என்றால், உன்றன்
வேலதனை நீபாரென்று) உரைப்பதற்கோர்
அமைச்சர்? ஊழல்
ஆகாது நாட்டினிலே எனவெடுத்துச்
சொன்னால், உடனே
அடையிவனைச் சிறையிலெனல் ஆளுநெறி
யாமா? சினிமா
மோகத்தால் வாக்களித்த மக்களிடம்
இதனை, நன்கு
விரித்துரைக்கும் நற்கலைஞ, மலாகநின
தன்பு நிறை ஆட்சி!



பதின்சீர்


அதிகார முற்றுமொரு இடத்தினிலே
குவிதல், மிக்க
ஆபத்தாம் எனச்சொன்னல் முறைத்துப்பார்க்
கின்ருர், நீயார்
இதுபற்றிக் கேட்பதற்கென்(று) உரைக்கின்ருர்
சில்லோர்; மற்ருர்
ஏனிந்த வம்பென்றே ஒதுங்கிக்கொள்
கின்ருர், பெற்ற
சுதந்திரத்தால் தமிழர்பெற்ற நலனென்ன
என்ருல், நாட்டைத்
துண்டாடப்போடுகின்ற வித்திதாமென்
கின்ருர்; பொதுவாய்
எதைநீசொன் னுலுமதை எதிர்ப்போரின்
இடையே நாளும்
ஏற்றம்பெறும் நற்கலைஞ, வருகின
தன்புநிறை ஆட்சி



சாகின்றுன் இலங்கையிலே தமிழனென்று
சொன்னுல், அவனைச்
சாகவிடு தடுக்காதே என்பதற்கோர்
அரசா? இங்கே
வேகின்றூர் படித்தவர்கள் வேலையின்றி
என்றுல், உன்றன்
வேலதனை நீபாரென்று உரைப்பதற்கோர்
அமைச்சர்? ஊழல்
ஆகாது நாட்டினிலே எனையெடுத்துச்
சொன்னுல், உடனே
அடையிவனைச் சிறையிலெனல் ஆளுநெறி
யாமா? சினிமா
மோகத்தால் வாக்களித்த மக்களிடம்
இதனை, நன்கு
விரித்துரைக்கும் நற்கலஞ, மலாகநின
தன்பு நிறை ஆட்சி!



பதின்சீர்
அதிகார முற்றுமொரு இடத்தினிலே
குவிதல், மிக்க
ஆபத்தாம் எனச்சொன்னல் முறைத்துப்பார்க்
கின்றிர், நீயார்
இதுபற்றிக் கேட்பதற்கென்(று) உரைக்கின்றிர்
சில்லோர்; மற்றிர்
ஏனிந்த வம்பென்றே ஒதுங்கிக்கொள்
கின்றிர், பெற்ற
சுதந்திரத்தால் தமிழர்பெற்ற நலனென்ன
என்றுல், நாட்டைத்
துண்டாடப் போடுகின்ற வித்திதாமென்
கின்றிர்; பொதுவாய்
எதைநீசொன் னுலுமதை எதிர்ப்போரின்
இடையே நாளும்
ஏற்றம்பெறும் நற்கலைஞ், வருகின
தன்புநிறை ஆட்சி



சாகின்றான் இலங்கையிலே தமிழனென்று
சொன்னால், அவனைச்
சாகவிடு தடுக்காதே என்பதற்கோர்
அரசா? இங்கே
வேகின்றார் படித்தவர்கள் வேலையின்றி
என்றால், உன்றன்
வேலைதனை நீபாரென்று உரைப்பதற்கோர்
அமைச்சர்? ஊழல்
ஆகாது நாட்டினிலே எனவெடுத்துச்
சொன்னால், உடனே
அடையிவனைச் சிறையிலெனல் ஆளுநெறி
யாமா? சினிமா
மோகத்தால் வாக்களித்த மக்களிடம்
இதனை, நன்கு
விரித்துரைக்கும் நற்கலைஞ, மலர்கநின
தன்பு நிறை ஆட்சி!



பதின்சீர்

அதிகார முற்றுமொரு இடத்தினிலே
குவிதல், மிக்க
ஆபத்தாம் எனச்சொன்னல் முறைத்துப்பார்க்
கின்றிருர், நீயார்
இதுபற்றிக் கேட்பதற்கென்(று) உரைக்கின்றிர்
சில்லோர்; மற்றிர்
ஏனிந்த வம்பென்றே ஒதுங்கிக்கொள்
கின்றிருர், பெற்ற
சுதந்திரத்தால் தமிழர்பெற்ற நலனென்ன
என்றுல், நாட்டைத்
துண்டாடப்போடுகின்ற வித்திதாமென்
கின்றிர்; பொதுவாய்
எதைநீசொன் னுலுமதை எதிர்ப்போரின்
இடையே நாளும்
ஏற்றம்பெறும் நற்கலைஞ, வருகின
தன்புநிறை ஆட்சி




சாகின்றன் இலங்கையிலே தமிழனென்று
சொன்னால், அவனைச்
சாகவிடு தடுக்காதே என்பதற்கோர்
அரசா? இங்கே
வேகின்றார் படித்தவர்கள் வேலையின்றி
என்றால், உன்றன்
வேலதனை நீபாரென்று உரைப்பதற்கோர்
அமைச்சர்? ஊழல்
ஆகாது நாட்டினிலே எனையெடுத்துச்
சொன்னால், உடனே
அடையவனைச் சிறையிலெனல் ஆளுநெறி
யாமா? சினிமா
மோகத்தால் வாக்களித்த மக்களிடம்
இதனை, நன்கு
விரித்துரைக்கும் நற்கலைஞ, மலர்கநின
தன்பு நிறை ஆட்சி!



மந்திரிமார் பெருக்கமின்றி மழைப்பெருக்க
மில்லை, மக்கள்
வாழ்க்கையிலே செழிப்பில்லை பசீதீர
வில்லை! வரியால்
வந்தபணம் வீணுகும் நிலையின்றித்
திட்டம், நன்கு
வகுத்துச்செயல் படும்நினைப்பின் ருளுவோருக்
கில்லை, இதனை
நிந்தையின்றிச் சொல்லுவோரை ஆள்வைத்துத்
தாக்கும், புதிய
நிலைதன்னைத் தமிழ்நாடு கண்டுவிட்ட
தாலே, மக்கள்
அந்திபகல் நின்னுட்சி வரவேண்டும்
என்றே, எண்ணி
அருங்கலைஞ, வாழ்த்துகின்றார் வருக
நின(து) அருஞ்சீ ராட்சி!



படித்தவரும் அழுகின்றார் வேலையின்றி
நாட்டில், ஏழை
பசிக்கொதிப்பில் அழுகின்றான் செல்வந்தர்
தாமும், தமது
மடிப்பணத்தைப் பறிக்கின்ற கொள்ளையரை
அடக்கும் ஆற்றல்
வாய்த்தஉயர் அரசில்லா நிலைக்கழகின்
றாரே, பெண்கள்
குடத்துடனே நீர்தேடித் தெருதெருவாய்
அலைந்து, காலின்
கொடும்வலிக்கே அழுகின்றார் மடங்களிலும்
அழுகை! அரசு
படமெடுக்கும் பாம்பாக ஆனநிலை
எண்ணி, மக்கள்
பரிவுடைய கலஞ, நினைவாழ்த்துகின்றார்,
வருகநின் ஆட்சி!



கோழிதனை வல்லூறு காத்திடுமோ
உலகில்? பெற்ற
குழந்தைகளை மாற்றிருந்தாய் காப்பாளோ
நன்கு? முற்றும்
ஆழிசூழி லங்கையிலே தமிழர்படும்
இன்னல், தன்னை
அகற்றுவதில் பிறஇனத்தார்க்(கு) உணர்வுண்டா
கிடுமோ? நாட்டைப்
பாழாக்கும் ஆட்சியிங்கே வந்துவிட்ட
தாலே, மக்கள்
பதைக்கின்றார் துடிக்கின்றார் கண்ணீர்வடிக்
கின்றார், நல்ல
ஈழத்தார் துயர்களையத் தமிழகத்தில்
கலைஞ, உன்றன்
எழிலார்ந்த ஆட்சிவர வாழ்த்துகின்றேன்,
வருகநின் ஆட்சி!




தமிழகத்தை ஆண்டிருந்த பிற இனத்தார்
எவரும், தமிழர்
தனிநலத்தைப் பேணியதாய் வரலாறே
யில்லை! மற்றும்
தமிழினத்தார் நலனழித்துத் தன்னினத்தார்
நலத்தைப், பேணத்
தயங்கினர்கள் என்பதுவாய்ச் செய்தியேது
மில்லை! என்றும்
தமிழினத்தைக் காப்பதற்குத் தமதினத்தார்
ஆளல், ஒன்றே
தக்கதென்ற உண்மையின்று கண்கூடாம்
அதனால், உள்ளம்
குமைந்தேயழும் தமிழர்துயர் துடைப்பதற்குக்
கலைஞ, உன்றன்
சுடர்மிகுந்த ஆட்சி வர வாழ்த்துகின்றேன்,
வருகநின் ஆட்சி!




அறம்தீய்த்தல் அறமென்று சொல்லுவோர்கள்
நாட்டை, ஆளல்
அறமென்றே ஆகிவிட்ட காட்சிதனைக்
கண்டோம்! என்றும்
இறவாத புகழ்படைத்த தமிழ்க்கற்ற
பேரும், தீமை
இந்நாட்டை அரசோச்சல் சரியெனயி
ருந்தார்! பொய்யை
அறைகூவல் விட்டெதிர்த்து வீழ்த்திடற்கெ
ழுந்த, தமிழர்
அருந்தலைவனுமெமது கருணைநிதிச்
சுடரே! உன்னை
முறையான தமிழ்கொண்டு வாழ்த்துகின்றேன்;
நடிப்பு, மாயை
முயக்கறுத்துத் தமிழகத்தில் மலர்கநின
தன்பு நிறை ஆட்சி!




வறுமையிலே வாடுவது தமிழர்பெற்ற
வரமா? அதனை
மாற்றமுனைந் துழைப்பதுவும் ஆளுவோருக்
கெதிரா? என்றும்
சீறுவது மட்டுந்தான் அரசினரின்
நெறியா? தமிழர்
சேர்ந்துவாழ வேண்டுமெனல் மாபாதகத்(து)
ஒன்று? என்றும்
தாறுமாறுய்ப் பேசுவதே அமைச்சர்களின்
பண்பா? மக்கள்
தன்னிடத்தில் செல்வாக்குத் தேடலொரு
பிழையா? இவற்றை
வீறுபடு சொல்லாலே மக்களிடம்
விளக்கும், நல்லார்
மனத்திலுறை நற்கலைஞ, மலர்கனின
தன்பு நிறை ஆட்சி!





கொள்கைவழி கோணுது செயலாற்றும்
தலைவ! தமிழர்
குலம்வாழத் தினம் உழைக்கும் தமிழ்க்குலத்து
மறவ! என்றும்,
எள்ளலற்ற தன்மையிலே சொல்லாற்றும்
திறலோய்! எழுத்தில்
ஈடற்ற பாவேந்தர் பரம்பரையில்
வந்தோய்! தொண்டில்
விள்ளரிய பெரியாரின் வழிநிற்கும்
வேந்தே! அண்ணா
வியக்கும்படி கட்சிப்பணி ஆற்றவல்ல
தம்பி! மக்கள்
உள்ளங்களில் உறைந்து திகழ் கருணாநிதிக்
கலைஞ! நாடு
உயர்வுடையவிரைவினிலே வருக நினது
அன்பு நிறை ஆட்சி!






பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்தோமென்னச்
சொல்வார், கோயில்
படியேறிச்சாமியுடன் குருக்களையும்
தொழுவார்! அண்ணல்
வகுத்தவழி அரசாட்சி செய்குவதாய்
பகர்வார், ஏழை
வதையும்படி துன்புறுத்தும் மதுக்கடையைத்
திறப்பார்! எங்கள்
மகத்துவத்தை ஆட்சியிலே காணென்று
ரைப்பார், லஞ்சம்
ளருவதை வாங்குவதைப் பாராதே
என்பார்! தமிழர்
அகத்துரையும் நற்கலஞ, இவ்விரட்டை
வேடம், கலைய
அதிவிரைவில் வந்திடுக, நிகரறு
நின் அன்பு நிறைஆட்சி!







பன்னிரண்டு சீர்


தீதை யெரிக்கும் சூரியனே!
செந்தமிழ் வளர்க்கும் மாமுகிலே!
சிறுமை அறியா முழுமதியே!
சிந்தனை வானின் தாரகையே!
நீதிக்கழனி உழுந்தலவா!
நேர்மை விளைச்சல் செய்பவனே!
நெஞ்சொடிந் தழுவோர் துயாத்துடைக்கும்
நெடும்படை யுடைய தமிழ்வேந்தே!
ஏதிக் குறனை உணரத்துபவா!
ஒண்தமிழ் மக்கள் உளத்துறைவோய்,
உறங்கும் தமிழர் தனையெழுப்பும்
ஓவாச் சேவல் ஆனவனே!
போதக் கலைஞ, மக்களுய்யப்
பொறுமை யோடு(உ)ழைப்பவனே!
பொய்மை வீழ மெய்நாட்டில்
பொலிய வருக நின்ஆட்சி!







கண்ணெனன் பேனே,உனைத்தமிழர்
காவற் படைக்காவலனென்பெனே,
கன்னித் தமிழர் பகைமுடிக்கும்
காய்ந்த வேல்நீ தானென்பெனே?
மண்ணில் தமிழர் துயர்துடைக்க
வந்த சிங்க ஏறென்பெனே?
வன்மை செய்யும் அரசுகளின்
வைரியாக உள்ளவனே!
அண்ணல் காந்தி பெரியாருடன்
அண்ணை வழியில் தொண்டாற்றும்
ஆற்றல் நிறைந்த அறிவூற்றே!
ஆணவக் காரரை அடக்குபவா!
பண்பின் உருவே பண்பறியார்
பகைக்கஞ் சாத நற்கலனே,
பகர்வேன் புதிய வரலாறு
படைக்க வருக நின்ஆட்சி!






ஈழத் தமிழ்நா(டு) ஒளிதுலங்க
எழுந்த உதய சூரியனே!
என்றும் தமிழர் நலம்பேணும்
எழுச்சி நிறைந்த ஒளிச்சுடரே!
தாழ்ந்தே யெவர்க்கும் தலைவணங்காத்
தன்னிக ரில்லா வன்குன்றே!
தன்னைப் பகைப்போர் தனைவிடுத்துத்
தமிழைப் பகைப்போர் தனையெதிர்ப்போய்!
ஆழ்ந்து (அ)றிந்தே அரசியலை
அழகாய் முறையாய் நடத்தியவா,
அரிய தமிழின் நலம்பேசல்
அரும்பொருள் சேர்க்கனெக்கொண்ட
பாழ்த்த எண்ணம் உடையோர்தம்
படிப்பை படிக்கா நற்கலைஞ,
பாரோர் புகழ வருகநின்றன்
பயனுள பண்புள நல்லாட்சி!







பிடித்த பதவி தனைக்காக்கப்
பேச்சில் சாகசம் பிணைத்தறியாய்;
பிணைத்த தோழமை தனையென்றும்
பிரிக்க நினைக்காப் பெற்றியனே!
எடுத்த காரியம் எதுவெனினும்
எண்ணிய வாங்கு முடிப்பவனே!
ஏற்ற கொள்கை வெற்றிபெற
இன்னலு ஏற்கும் துணிவுடையோய்!
கொடுத்த வாக்கை நிறைவேற்றும்
கொள்கை யில்லா தன்மையினல்
குதர்க்க வாதம் பேசுகின்ற
குணமில்லாத நேரியவா!
நடிப்பே ஆட்சி யெனஆக்கி
நாட்டைக் கெடுக்கா நற்கலஞ
நாடுபோற்ற வருகவுன்றன்
நலஞ்சேர் தூய நல்லாட்சி!



அறிவின் குன்றே ஒளிச்சுடரே
அரிய தமிழின் காவலனே!
அகத்தைத் தமிழர் நலனுக்காய்
ஆக்கி வாழும் தாய்மனத்தோய்!
நெறியார் வழியில் நிற்பவனே!
நீதிப் பகைவர் கடும்பகைவா!
நிசம்பே சாத அரசியலார்
நெஞ்சில் பாயும் சுடர்வாளே!
பறைய றைந்தே தமிழ்ப்பகைவர்
பாசறைதன்னைத் தகர்த்தழிப்போய்!
பண்பு பேணுப் பண்பினரைப்
பண்பால் திருத்தும் பண்புடையோய்!
வெறியால் இலங்கைத் தமிழர்களை
வெல்ல நினைப்போர் வீழ்ந்துபட
வேலை யாவும் செய்கலைஞ,
விரைந்து வருக நின் ஆட்சி!



இந்தி யாவின் மாநிலங்கள்
எங்கும் அவ்வவ் மாநிலத்தின்
இனத்தார் தலைமை தனிலாட்சி
என்றும் நடக்கக் காணுகின்றோம்;
நந்தம் நாடாம் தமிழகத்தின்
நடப்போ வேறாய் இருப்பதும்ஏன்?
"நாட்டை இனத்தைப் பேணுகின்ற
நல்ல பண்பு நம்மோரிடம்
எந்த நாளும் இருந்ததில்லை"
என்று பெரியார் வெந்து சொன்ன
அந்தச் சொல்லை எண்ணுகின்றேன்;
அவர்தம் அறிவைப் போற்றுகின்றேன்;
இந்த நிலைமை மாறுதற்கும்
எழிலார் எந்தம் நற்கலைஞர்,
உன்றன் ஆட்சி வரல்நலமாம்!
உடனே வருக நின்ஆட்சி!



தமிழகம் தன்னைத் தமிழன் ஆளும்
தனித்த விடுதலையைத்
தமிழகம் என்று பெறுமோ அன்றே
தமிழின விடுதலையாம்!
அமிழ்தெனும் தமிழைப் பிறமொழி வெல்லும்
ஆகாச் செயலினுக்கு
ஆள்பவர் துணையெனும் காலம் தொலைவதே
அருந்தமிழ் விடுதலையாம்!
இமிழ்கடல் வரப்பில் தமிழினம் உயர்தல்
என்றே அன்றே தான்
இன்தமிழ்நாடு விடுதலை நாடாம்!
இதுமெய் மெய்யாகும்!
தமிழின மக்களின் தலைவ, கலைஞ,
தகுமின் நிலைகாணத்
தடையாய் இருப்பதைத் தகர்த்தேவுநத்
தணிவிலா நின்ஆட்சி!


குப்பையைக் கொண்டு கோபுரம் கட்டினால்
கோபுரம் நிலைக்காது
கொள்கையில் லாதார் நாட்டினை ஆண்டால்
குடிகள் செழிக்காது.
கப்பலில் பொத்தல் இருந்தால் கப்பல்
கடலினைக் கடக்காது
காலமும் ஏய்ப்போர் ஆண்டால் நாட்டின்
கஷ்டம் தொலையாது
ஒப்புற வில்லாக் குடும்பம் என்றும்
உயர்ந்திட முடியாது
ஊதாரித் தனமும் லஞ்சமும் உடையோர்
ஊராளக் கூடாது
செப்பரும் தமிழர் தலைவ, கலைஞ,
சீர்பெறுத் தமிழ்நாடு
சீக்கிரம் வருக வருக நினது
தெளிவுறும் நல்ஆட்சி!

எவ்வித தியாகமும் செய்யார் பதவி
ஏறுதல் ஒருபுரட்சி!
ஏதொரு நன்மையும் செய்யார் ஆட்சி
இருப்பது மறுபுரட்சி!
ஒவ்வொரு நாளும் பெய்யே பேசி
ஊராளும் புரட்சி!
உண்மை சொல்வோர் வாழல் தீதெனல்
உலகறி யாப்புரட்சி!
செவ்வை யில்லாத் திட்டம் பலப்பல
செப்புவ தும் புரட்சி!
தேச மக்கள் நம்பிடில் இவர்களைச்
செழித்திடும் பெரும்வரட்சி!
நவ்விய புதுமைப் புரட்சிப் பெரியார்
நாட்டிய வழிநடக்கும்
நாடறி கலைஞ, விரைந்து வருக
நலந்தர நின்ஆட்சி!




என்றும் இல்லா நிலையில் மக்கள்
இன்னல் படுங்காலை
ஏதும் செய்யார் நாட்டை ஆளல்
ஏடறி யாப்புரட்சி!
ஒன்றிய தமிழின மக்கள் மனத்தில்
உறுபகை வளர்ப்போர்கள்
உத்தமர் என்னப் பெயர்த்தாங் கிடுதல்
ஓதரும் புதுப்புரட்சி!
துன்னிடும் இயற்கையும் சீறித் தாக்கிடும்
துயர்தரு ஆட்சிதனைத்
தோளில் தாங்கும் ஆட்கள் இருப்பது
சுரஜண பிலாப்புரட்சி!
பொன்றுப் புகழ்நிலைப் புரட்சிப் பெரியார்
புகன்ற சமதர்மப்
புரட்சி தோன்றக் கலைஞ,விரைந்து
ஊக்கட்டும் நின்ஆட்சி!





பதினென்கு சீர்

திருக்குவளையெனும் ஊரில் முத்துவேல் அஞ்சுகம்
திருமகவாய் உதித்ததகோவே!
திருவார்ந்த அரசியலைக் காஞ்சியீ ரோட்டிலே
திறம்பட பயின்ற திறவோய்!
தருக்கவா தக்கலையைக் கற்றவர் வியந்திடத்
தர்க்கிக்கும் ஆற்றல் உடையோய்!
தானுக எவ்துணையும் இன்றியே கலைபல
தகுமாறு கற்ற தகவோய்!
இருந்தமிழர் நெஞ்சமதில் இருப்பவா துயருறும்
ஏழையரின் இடுக்கண்துடைப்போய்!
இந்நாடு மேன்மையுற என்றும் முதல்வராய்
இருந்தாள வேண்டும் நீயே!
பெருக்கமுற உலகெலாம் இருக்தும்தமிழ்த்தம்
பேராவல் இதுவாம் சொன்னேன்
பிந்தாமல் அவராவல் நிறைவேரக் கலைஞ,நீ
புவிபோற்ற ஆண்டு வாழ்க!






பதினறுசீர்

ஆட்சிக்(கு) இலக்கணம் வகுத்தவர் வழியிலே
ஆட்சி நடத்திய அறவோய்வாழி!
அருந்தமிழ்க் குறள்நெறி எங்கும் பரவிட
அவாவுற்(று) உழைக்கும் தலைவாவாழி!
காட்சிக்(கு) எளியவா கருத்தில் பெரியவா
கடும் உழைப்(பு) உடையவா காலமும்வாழி!
கமழ்சுவைக் கனிதரும் சோலைகள் சூழ் தமிழ்
நாட்டின் தலைவனே நலமுடன் வாழி!
மாட்சிமிகுந்தவர் போற்றும் சிலம்பினை
மக்கள் அறிந்திடச் செய்தவாவாழி!
வஞ்சகர் அஞ்சிட வறியவர் மகிழ்ந்திட
மதியுடன் ஆண்ட நிதியமே வாழி!
நாட்டிற்(கு) உழைப்பதே போற்றும் செயலென
நாளும் உழைத்திடும் கலைஞ,வாழி!
நற்றமிழ் மக்கள் வாழ்த்திட மீண்டு நீ
நாட்டினை ஆண்டு நூருண்டுகள் வாழி!



உயிர் வருக்க அகவல்

அகிலம் அறிந்த அண்ணலே வாழி!
ஆன்ற குணத்துச் சான்றேய் வாழி!
இல்லார்க் கிரங்கும் நல்லவா வாழி!
ஈடிலா உழைப்பின் ஏந்தலே வாழி!
உலகிடைத் தமிழை உயர்த்தியோய் வாழி!
ஊக்கமாய்த் தீமையை எதிர்ப்பவா வாழி!
எழிலார் தமிழினக் காவலா வாழி!
ஏலார் துயர்துடைத் திடுபவா வாழி!
ஐயமில் நல்லரசு அமைப்பவா வாழி!
ஒன்றே தமிழினம் என்பவா வாழி!
ஓவாக் கீர்த்திக் குரியநற் கலைஞ,
ஔவிய மறநூ றுண்டுநீ வாழ்கவே!


வாழ்க்க் கலைஞர்!
வாழ்கத் தமிழினம்!
வாழ்கத் தமிழ்!
வாழ்கத் தமிழ்நாடு!
வாழ்க பாரதம்!
வாழிய உலகலாம்!

